## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களித்தன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட காலப்பகுதியில் சீராக்கல் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையான திட்டமிட்டப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் கட்டிட திருத்த வேலைக்காக மேற் கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,834,504 தொகை வருவாய் செலவொன்றென கணிக்காமல் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் சொத்துக்களுக் கான நேரொத்த பெறுமானத்தேய்வு பெறுமதி முறையே ரூபா 4,592,779 தொகை மற்றும் ரூபா 241,725 தொகை மிகையாக நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டிருந்தது. | இந்தச் செலவின் பெறுமதி பொருண்மையான பெறுமதி ஒன்றினைக் கொண்டிருந்தமையால் அதன் மூலம் சொத்துக் களின் பெறுமதியில் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருப்பதனால் அப் பெறுமதியை மூலதனப் படுத்தப்பட்டது. | குறிப்பிட்ட கணக்கு நியமங்களின் படி மூலதன மற்றும் வருவாய்ச் செலவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கிளிநொச்சி பஸ் நிலைய நிர்மாண வேலை தொடர்பான உடன்படிக்கை மீறப்பட்டிருப்பதனால் ஆணைக்குழு வினால் ரூபா 4,869,212 தொகைக்கான விலைகூறல் பாதுகாப்பு முறி மற்றும் ரூபா 2,438,700 தொகைக்கான செயலாற்றல் பாதுகாப்பு முறியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், அத் தொகையை வருமானத்திற்கு செலவு வைக்காமல் செலுத்த வேண்டிய கணக்குகளின் கீழ் முன்னைய ஆண்டு முதல் காட்டப்பட்டிருந்தது. அதன் படி நிதிக்கூற்றுக்களில் ஒட்டுமொத்த மிகை ரூபா 7,334,912 தொகை குறைவாகவும் மற்றும் செலுத்த வேண்டிய மீதி அந்தப் பெறுமதியால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | இந்த ஆண்டின் போது கிளிநொச்சி பஸ் நிலையம் வடமாகாண சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிதிக்கூற்றுக்களில் சிக்கல்களும் அதன் பின்னர் தீர்க்கப்படும். | சரியாக விலை கூறல் மற்றும் செயலாற்றல் பாதுகாப்பு முறிகளை அறவீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ஆணைக்குழுவினால் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 40,698,427 தொகைக்கான சொத்துக்கள் பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்புடைய நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திருப்பிச் செலுத்த வேண்டிய ரூபா 59,703,404 இற்கான குறிப்பிட்ட டென்டர் வைப்புப் பதிவேடும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படாமையால் அந்த விடயங்களை திருப்திகரமாக மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அட்டவணைகள் நாட்குறிப்புடன் இணைக்கப்பட்டதுடன் இணைக்க முடியாத விரிவான அட்டவணைகள் வேறாக கோப்புக்களில் பேணப்பட்டு வருவதுடன் அப் பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக் கப்பட்டது. எவ்வாறாயினும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அட்டவணைகள் நாட்குறிப்பிற்கு உட்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | குறிப்பிட்ட அட்டவணைகள் மற்றும் விரிவான தகவல்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சிசு செரிய, கெமிசெரிய மற்றும் நிசிசெரிய செயற்திட்டங்களின் கீழ் சேவைகள் வழங்கப்பட்ட நிறுவனங்களுக்கு 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ரூபா 30,205,433 இற்கான பொறுப்புக்களுக்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அதேபோல் இவ்வாறான சேவைகள் வழங்குவதற்காக அரச கொள்கை ஒன்றின் மீது திறைசேரியில் இருந்து குறிப்பிட்ட கிரயத்தை மீளளிப்பு செய்வதற்காக மானியங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த மானியங்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கை ஒன்று ஆணைக் குழுவினால் இனங்கண்டிருக்க வில்லை. | சிசு செரிய, கெமிசெரிய மற்றும் நிசிசெரிய செயற்திட்டங்களுக்காக 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்த தொகை மற்றும் ஆண்டிற்கான திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த ஏற்பாடுகள் இடையே வித்தியாசத்திற் காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் மிகைத் தொகை பின்னைய வருடத்தின் செலவுகள் என காட்டப்பட்டிருந்தது.<br>அதற்கான காரணம் ஆண்டிற்கான செலவு களை மேற்கொள்வதற் காக போதியளவு ஏற்பாடுகள் திறைசேரியில் இருந்து விடுவிக்கப்படாமை ஆகும். | கணக்குக் கொள்கைகளின் படி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | இணையத்தின் ஊடாக பயணிகள் ஆசனங்கள் ஒதுக்கும் செயற் திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2018 ஒக்தோபர் 27 திகதி ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 1,750,000 கிரயத்தையுடைய இந்த செயற்திட்டத்தின் முன்னைய ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வேலைகளின் பெறுமதி ஆகிய ரூபா 1,428,545 தொகை கணினி உடன் தொடர்புடைய மென்பொருள் கணக்கிற்கு மூலதனப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதனை நடைபெறு வேலை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், அதனை மீளாய்வாண்டிலும் சரி செய்யாமையினால் கணினிகள் தொடர்பான மென்பொருள் கணக்கு அப் பெறுமதியினால் குறைவாகவும், நடைபெறு வேலை கணக்கு அப் பெறுமதியினால் மிகையாகவும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இணையத்தின் ஊடாக பயணிகள் ஆசனங்கள் ஒதுக்கும் செயற் திட்டத்துக்கான பெறுமதி ரூபா 1,428,545 இற்கான தொகைக்கு உரிய சரி செய்தல் சீராக்கல்கள் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>(இணைப்பு 09) | குறிப்பிட்ட சரியான செய்முறை கடைபிடிக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலக்கம் பீ.ஈ.டீ12 மற்றும் 2003 ஜூன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.1.2 | நிறுவனத்தின் நலன்புரி திட்டங்கள் தொடர்பாக திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ஊழியர் காப்புறுதி மற்றும் நலன்புரி அலுவல்களுக்காக ரூபா 12,209,422 தொகை செலவிடப் பட்டிருந்தது. | 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் 9(உ) இன் கீழ் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக நலன்புரி வினோத வசதிகள் வழங்குதல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | இதற்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 மே 25 ஆந் திகதிய பீ.ஈ.டீ2/2015 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 4 | இந்தச் சுற்றறிக்கைக்கு முரணாக கையடக்கத் தொலைபேசி ஒன்று மற்றும் (Apple 11.0 pad) அய் பேட் ஒன்று கொள்வனவு செய்வதற்காக இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 136,500 தொகை மற்றும் ரூபா 223,999 தொகை செலவிடப்பட்டிருந்தது. | பாதையை கண்டறிவதற்கான நிறுவனத்தின் GPS கட்டுப்பாட்டு மையத்துடன் தொடர்பு கொள்வதற்கு நேரிடுகின்றது. அதற்காக விஷேட வசதிகளை உடைய கையடக்கத் தொலைபேசி ஒன்று வழங்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் ERP முறைமையில் இருந்து அங்கீகாரம் பெற்றுக் கொடுப்பதற்காக I Pad பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் தலைவருக்கு நிறுவனத்தின் CCTV முறைமையுடன் தொடர்புபட முடியும். அதனை கடமைத் தேவையொன்றென கணித்து வழங்கப்பட்டது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி கொள்வனவு மேற்கொள்ளும் போது சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் இன்மையால் அதற்காக சரியான நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலக்கம் 2016/30 மற்றும் 2019 திசெம்பர் 29 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் படி வாகனத்தை கழற்றிய கராஜில் இருந்து பெற்றுக் கொள்ளும் கூறுவிலைகளின் நியாயத் தன்மை தொடர்பாக பொதுத்துறை திணைக்களம் ஒன்றின், கூட்டுத்தாபனம் ஒன்றின் அல்லது தகைமையுடைய இயந்திரப் பொறியியலாளர் ஒருவரின் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் ஆணைக் குழுவினால் அவ்வாறு சான்றுகள் பெற்றுக் கொள்ளாமல் வாகனம் ஒன்றின் திருத்தவேலை ஒன்றிற்காக ரூபா 167,847 தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2019 செப்தெம்பர் 24 திகதி கடமை வேலை ஒன்றிற்காக செல்லும் போது பெத்தகான பிரதேசத்தில் இன்ஜினில் நீர் ஒழுகுதல் காரணமாக விபத்துக்குள்ளாகிய KY-9256 இலக்க மோட்டார் வாகனத்தை உயிர்ப்பிப்பதற்கு முடியாது காணப்பட்டதனால் அச் சந்தர்ப்பத்தில் சாரதியினால் அவசர பரிசோதனை ஒன்றிற்காக முகவர்களை பெற்றுக் கொள்வதற்கா முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. அதற்காக நீண்ட நேரம் எடுத்தல் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் பெற்றுக்கொள்வதற்கு முடியாத நிலைமை காணப்பட்ட காரணத்தினால் விபத்து ஏற்பட்ட இடத்துக்கு அண்மையில் இருந்த போக்குவரத்து அமைச்சின் பதிவு செய்யப்பட்டிருந்த கராஜ் ஒன்றாகிக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு சொந்தமான வாகனங்களின் திருத்த வேலை மேற்கொள்ளும் சன்ஜீவ மோட்டர்ஸ் நிறுவனத்துக்கு அறிவுறுத்தி உடனடியாக அவர்களின் தொழில் நுட்பவியலாளரின் பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டிருந்தது. இலங்கை போக்குவரத்து சபையின் தொழிநுட்பவியலாளரினால் இந்த வாகனத் தின் பரிசோதனை மேற்கொள்வதற்காக தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மிகை மழை மற்றும் வெள்ளம் காரணமாக பொறியியலாளர் உடனடியாக வர முடியாது | வாகன திருத்த வேலைகள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் கடைபிடிக்க வேண்டிய சரியான செய்முறை கடைபிடிக்கப் பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | போயிருந்தது. KY-9256 இலக்கங் கொண்ட மோட்டார் வாகனம் தலைவரின் வாகனம் என்பதால் அந்த வாகனத்தை மிக விரைவாக திருத்த வேலை மேற்கொண்டு பூர்த்தி செய்யவேண்டி இருந்ததனால் தலைவரின் அறிவுரையின் படி சன்ஜீவ மோட்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. திருத்தவேலை மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் இயந்திரப் பொறியியலாளரினால் இந்த மோட்டார் வாகனத்தின் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் திருத்த வேலையின் பின்னரும் திருத்தவேலைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருந்த தென பரிந்துரைக்கப் பட்டிருந்தது. | |
| (ஈ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் பிரிவு 10(5) | ஆணைக்குழுவினால் ஒவ்வொரு வருட ஆரம்பத் திலும் காணப்படும் தேறிய மிகை வருமானத்தின் மீதியாகிய அனைத்துத் தொகையும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 ஆண்டில் ரூபா 178,379,348 இற்கான மிகையொன்று காணப்பட்ட போதிலும் ரூபா 50,000,000 தொகை மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அத்தியவசிய சந்தர்ப்பங் களில் பயன்படுத்தக் கூடிய விதமாக தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக ஏற்பாடுகளை சேமித்து வைத்து உச்சமட்ட தொகை ஒன்று திறைசேரிக்கு அனுப்பு வதற்கு குறித்துக் கொண்டேன். | குறிப்பிட்ட நிதி அதிகாரச் சட்டத்தின் படி மிகைப் பணம் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். |
| (உ) | நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 11 மற்றும் 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 8.2.2 | மிகைப் பணம் முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் இணக்கம் மற்றும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு | தற்காலிக மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறுவதற்காக தனியார் போக்குவரத்து சேவை அமைச்சின் மூலம் விண்ணப்பிக்கப்பட்டது. | மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு அதிகாரச் சட்டம் மற்றும் 2003 ஜுன் 02 ஆந் திகதிய மற்றும் |

அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது நிறுவனத்தினால் ரூபா 37,397,490 நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 13,823,174 திறைசேரி உண்டியல்களில் மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா528,949,572 தொகை குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(குறிப்பிட்ட கடிதத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இலக்கம் ஆர்டீ/பீ/ என்டீசீ/எப்ஏ/2012/22 இலக்கங் கொண்ட ஐய வினாவிற்கான பதிலுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது) அவ்வாறாயினும் 2012 ஆகஸ்ட் 22 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் குறுகிய கால மிகை நிதியம் ஏழு நாள் அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு பதிலாக அதில் ஒரு பகுதியை கூடிய வட்டி வருமானம் பெறுவதற் காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யும் படி அறிவுரை கிடைத்திருந்தது.

(பொது முயற்சிகள் தொடர்பான குழுக்கூட்டத்தின் குறிப்புகளின் பிரதி ஒன்று ஆர்டீ/பீ/என்டீசீ/ எப்ஏ/2012/22 இலக்கங் கொண்ட ஐய வினாவிற்கான பதிலுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது)

அதற்கு மேலதிகமாக தற்காலிய மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்காக திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு போக்குவரத்து சேவை முகாமைத்துவ அமைச்சிற்கு 2019.02.07 திகதி விண்ணப்பிக்கப் பட்டதுடன் இதுவரை அதற்கான பதில் கிடைத்திருக்கவில்லை என கருணையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பீஈடீ/12 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மேற் கொள்ளப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 (2)(அ) | விஷேட கருமங்களுக்காக முற்பணங்கள் வழங்கும் போது சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முற்பணம் வழங்கப்பட வேண்டியதுடன் அதற்கு புறம்பாக வேறு உத்தியோகத்தர்களுக்கும் முற்பணம் வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட விடயத் திற்கான துணைக் கட்டுநிதி வழங்கும் போது ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 இற்கான உச்சமட்டம் வரையறுக்கப்பட வேண்டும் எனினும், அவ்வரையறை மிகைத்து 2019 ஆண்டின் போது 22 சந்தர்ப்பங்களில் கூட்டுத் தொகை ரூபா 4,827,137 இற்கான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கணக்கீட்டுக் கொள்கை களின் படி முற்பணங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன என கருணையுடன் அறிவிக்கின்றேன். அதே போல் பல்வேறு செயற்திட்டங்களுக்காக தூர பிரதேசங்களுக்கு போகும் போது குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் வழங்க நேரிடுகின்றதுடன் பல சந்தர்ப்பங்களில் காசோலைகள் மூலம் கொடுப்பனவு மேற் கொள்ளப்படுகின்றது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்கள் கடைபிடிக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(5) | ஏதேனும் துணைக் கட்டுநிதி ஒன்று வழங்கப்பட்டு குறிப்பிட்ட கருமம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் துணைக் கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 10 சந்தர்ப்பங்களில் ரூபா 737,675 இற்கான முற்பணங்கள் தீர்த்தல் இந்தப் பிரமாணங்களுக்கு முரணாக மேற்கொள்ளப் பட்டிருந்தது. | 03 நாட்களுக்குள் முற்பணங்கள் தீர்க்கப் படுவதுடன் தவிர்க்க முடியாத காரணத்தினால் சில நாட்கள் தாமதம் ஆகின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் தீர்த்தல் மேற்கொள்ளப் படுவதுடன் கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிகாட்டியுள்ளவாறு எதிர்காலத்தில் இவ்வாறான தாமதமடைதல் ஏற்படாமல் இருப்பதற்கு குறித்துக்கொண்டேன். | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 178,379,346 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 165,205,063 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 13,174,283 இற்கான அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வீதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 3,250,738 தொகையினால் அதிகரிப்பதற்கு ஏனைய வருமானங்கள் ரூபா 1,921,557 இனால் அதிகரித்தலும் முக்கியமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் மாகாணங் களுக்கு இடையிலான பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு சீருடை வழங்குவதற்காக 2014 ஆண்டின் போது பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து 15,000 சீருடைகள் ரூபா 8,372,619 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த சீருடைகளில் ரூபா 887,893 பெறுமதியான 1801 சேட்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2020 ஜுலை 07 திகதி வரை சுவடிக் கூடத்தில் குவிக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டதுடன் மீதியான சேட்களை வினியோகிக்கப்பட்ட தற்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சாரதிகள்/ நடத்துனர் களுக்காக வினியோகிப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த சீருடைகளை அவர்களுக்கு வினியோகிக்கப்பட்ட ஆவணங்கள் கோவைகளில் காணப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்க முடியும்.<br><br>அதே போல் இந்த 1801 சீருடைகள் மீதியாக இருப்பதற்கு சீருடைகள் வினியோகிக்கும் போது அது தொடர்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படல் மற்றும் பஸ் வண்டிகள் வேலை நிறுத்தம் செய்வதற்கு செயற்பட்டதுடன் எதிர்காலத்தில் இந்த சீருடைகளை வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சீருடைகள் குறிப்பிட்ட சாரதிகளுக்கு மற்றும் நடாத்துனர்களுக்கு வினியோகிக்காமல் களஞ்சியம் ஒன்றில் காணப்படல் தேவையான குறிக்கோள் நிறைவேற்றப்படாமல் பலனற்ற செலவொன் றாகியுள்ளது. அரசாங்கப் பணம் விரயமாகும் சந்தர்ப்பங்களில் ஈடுபடுத்தாமல் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் படி பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக மற்றும் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2005 ஒக்தோபர் 06 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி | 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக் குழு சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட | பொருத்தமான முறையான செய்முறை கடைபிடிக்க வேண்டும். |

கேள்வி கோரப்பட்டு நிரந்தர பிரயாணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக முறையான செய்முறை ஒன்று அறிமுகப்படுத்தி இருக்கவில்லை. அதே போல் கேள்வி அழைப்பின் மூலம் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பான விடயத்தை உட்படுத்தி சட்டத்தை திருத்து வதற்கும் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

செய்முறைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளது. அதன் படி பொதுவான பாதைகளில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக 2005 இல் அங்கீகரிக்கப்பட்டி ருந்த இலக்கம் அமப/05/ 1461/031/036 இலக்கங் கொண்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அதிவேக பாதைகளில் புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் 2017 ஆம் ஆண்டில் அமைச்சரவை யினால் அங்கீகரிக்கப் பட்டிருந்த 17/0700/709/029 இலக்கங் கொண்ட குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ள செய்முறை மீது மேற்கொள்ளப் படுகின்றது.

2017 ஆம் ஆண்டின் அமைச்சரவை தீர்மானத்துக்கு முன்னர் 2017 ஆம் ஆண்டின் அமப/14/1061/435/004 - I இலக்கங் கொண்ட அமைச்சரவைக் குறிப்பின் மூலமும் அதிவேகப் பாதைகளில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், 16/0065/709/003 இலக்கங் கொண்ட அமைச்சரவை குறிப்பின் மூலம் அறிமுகப்படுத்தி இருந்த செய்முறையின் ஊடாகவும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு கேள்விகள் அழைக்கப் பட்டிருந்ததுடன் நீதிமன்ற செயற்பாடுகளின் காரணமாக அந்த கேள்வி இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

மேற்கூறிய அனைத்து அமைச்சரவை தீர்மானங்களில் குறிப்பிடப்பட்ட செய்முறைகளை இரத்துச்

செய்து புதிய செய்முறை ஒன்று தயாரிக்கும் நோக்குடன் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கும் புதிய செய் முறை தயாரிப்பதற்காக அமப/19/0409/123/17 இலக்கங் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் குழுவினால் செய்முறை ஒன்று வரைவு செய்து அமைச்சுக்கு ஒப்படைக் கப்பட்டிருந்தது. அதே போல் தேசிய போக்குவரத்து ஆணைக் குழு சட்டத்தை திருத்துவதற்காக தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன், அந்த உத்தேச திருத்த வரைவு தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறுவதற் காக போக்குவரத்துச் சேவை முகாமைத்துவ அமைச்சுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.

(இ) சட்டத்தை திருத்தாமல் ஆணைக் குழுவினால் 2019 திசெம்பர் 31 திகதி அளவில் 3103 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப் பட்டிருந்ததுடன் அவற்றில் 223 கேள்வி அழைப்பு மூலம் வழங்கப்பட்டிருந்தது. 2880 அனுமதிப் பத்திரங்கள் கேள்வி அழைப்புச் செய்முறைக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரங்களாக காணப்பட்டதுடன் அவை வருடாந்தம் ரூபா 3,000 மற்றும் ரூபா 15,000 கொடுப்பனவின் மூலம் புதுப்பிக்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரங்கள் ஆகும். இதன் படி ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறையின்றி அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் பல்வேறு நடைமுறை களின் படி மேற்கொள்ளப்பட்டிருந்த தென அவதானிக்கப்பட்டது. அதே போல் அதிவேகப் பாதையில் ஒரு நாளைக்கு குறைந்த தொழிநுட்ப பெறுமதி மீது 61 பயணிகள் சேவை

1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக் குழு சட்டத்தின் 24 ஆம் பிரிவின் படி பயணிகள் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு ஆணைக் குழுவிற்கு ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் திறந்த மற்றும் வெளிப்படு தன்மையுடன் வழங்கும் செய்முறை தொடர்பாக சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்ட சந்தர்ப்பம் முதல் 2008 ஆம் ஆண்டு வரை பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது ஒவ்வொரு நபர்களினாலும்

பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திற்கான முறையான செய்முறை ஒன்றின் படி கடைபிடிக்கப்பட வேண்டும்.

அனுமதிப்பத்திரங்களும் ரூபா 2,500 கட்டணத்தின் மீது 16 பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டிருந்தன.

மேற் கொள்ளப்படும் விண்ணப்பங்களை அடிப்படையாகக் கொண்டே ஆகும். அங்கு திரந்த மற்றும் வெளிப்படைத் தன்மை காணப்படவில்லை. அந்த பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் தொடர்பாக ஏதும் குறிப்பிடப்பட்டிருக்காத துடன் ரூபா 3,000 தொகை அறவீடு செய்து வருடாந்தம் நாளது வரை ஆக்கப்பட்டிருந்தது.

2005 ஆண்டின் போது அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டிருந்த அமப/05/1461/031/036 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத் தின் படி நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கும் போது டெண்டர் செய்முறை கடைபிடிப் பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த செய்முறையின் மூலம் 2008 ஆம் ஆண்டின் போது முதல் முறையாக கேள்வி அழைக்கப்பட்டிருந்தது.

அதன் படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்ட காலம் முதல் 2008 ஆண்டு வரை அதாவது 15 வருடங்களுக்கு அண்மித்த காலம் விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகளின் மீது தலைவரின் விருப்பத்தின் படி பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

2019.12.31 திகதியில் உள்ளவாறு வழங்கப் பட்டிருந்த தரவுகளின் படி 3103 பயணிகள் சேவை செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரங்கள் கேள்வி நடைமுறையின்

கீழ் வழங்கப்பட்டிருந்த செல்லுபடியாக காணப்படும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர எண்ணிக்கை 223 ஆகும். அதன் படி செல்லுபடியாக காணப்படும் மீதியான 2880 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் கேள்வி நடைமுறை செயற்படுத்துவதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் ஆகும். தேசிய போக்குவரத்து ஆணைக் குழுச் சட்டத்தின் 24 மற்றும் 30 பிரிவுகளின் படி பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கான காலம் தொடர்பாக சட்ட மா அதிபர் திணைக்களத் தினால் வழங்கியிருந்த தீர்மானத்தின் படி அனுமதிப்பத்திரக் காலம் தொடர்பாக வரையறை ஒன்று காட்டப்பட்டிருக்க வில்லை.

தற்போது காணப்படும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் ஏதேனும் திருத்தம் ஒன்று செய்ய நேரிட்ட சந்தர்ப்பத்தில் (வீதித் திருத்தம் மற்றும் உறவுகளின் மீது உரிமையை மாற்றுதல்) அந்த பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வருடாந்தம் நாளது வரை ஆக்கும் கட்டணம் ரூபா 3000 முதல் ரூபா 15,000 வரை அதிகரிக்கப்படு கின்றது.

அதன் படி தற்போது செல்லுபடியாகக் காணப்படும் 223 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களுக்காக கேள்விக் கட்டணம் மற்றும் ரூபா 3,000 அறவீடு செய்வதன் மூலமும் 922 அனுமதிப் பத்திரங்கள் ரூபா

| | | |
|---|---|---|
| | 15,000 அறவீடு செய்வதன் மூலமும் வருடாந்தம் நாளது வரை ஆக்கப் படுகின்றது. மீதியாக உள்ள பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்திற்காக ரூபா 3,000 தொகை ஒன்று அறவிடப்படுவதுடன் அத் தொகையினை அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சொத்துக்களை கொள்வனவு செய்தல் மாத்திரம் பதிவு செய்யப்படுவதுடன் அப் பதிவேட்டின் சொத்துக்களை அகற்றுதல் தொடர்பான தகவல்கள் உட்படுத்தியிருக்காததுடன் ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 4,507,651 தொகைக்கான 45 சொத்து விடயங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யும் போது சொத்துக்களை இனங்காண்பதற்காக இலக்கமிடும் முறை ஒன்று குறிப்பிடப்பட்டிருக்காத சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,248,178 தொகை பெறுமதியுடைய சொத்துக்கள் அப்புறப்படுத்தப் பட்டிருந்த போதிலும், நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று காணப்படாமையால் அச் சொத்துக்களின் பெறுமதி மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் தொடர்பான தகவல்கள் கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முடியாதிருந்தது. மேலும், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,269,973 தொகை பெறுமதியான நூலகப் புத்தகங்கள் பதிவேடு ஒன்றில் பதிவு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சொத்துக்கள் பதிவேட்டில் சொத்துக்கள் அப்புறப்படுத்துவது தொடர்பான பதிவுகள் செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>கொள்வனவு செய்யப்பட்ட அந்த அனைத்து சொத்துக் களும் சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>அனைத்து ஆண்டுகளின் போதும் கொள்வனவு செய்யப்படுகின்ற நூலகப் புத்தகங்களும் குறிப்பிட்ட ஆண்டுகளுக்காக வெவ்வேறாக ஆவணப் படுத்தப்பட்டிருந்தது. | சரியான முறையில் சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டிய துடன் சரியாக நாளது வரை ஆக்கப்பட வேண்டியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆணைக்குழுவினால் அலுவலகத்திற்கு அண்மையில் மற்றும் பெஸ்டியன் மாவத்தை பொலிஸ் காவலிடத்துக்கு அண்மையில் அமைந்துள்ள 02 கழிவறை முறைமைகளின் பொது வசதிகள் பூர்த்தி செய்வதற்காக பராமரிப் பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2010 செப்தெம்பர் 18 திகதி முதல் 2020 செப்தெம்பர் 17 திகதி வரை 10 வருட காலங்களுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இங்கு இந்த உடன்படிக்கையின் 1,2,7 மற்றும் 8 நிபந்தனைகளை மீறல் தொடர்பாக தொடர்ச்சியாக ஆணைக்குழுவிற்கு பொதுமக்கள் முறைப்பாடு கிடைத்திருந்ததுடன் அதன் படி 2015, 2016, 2017 மற்றும் 2019 ஆண்டுகளின் போது கண்டிப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனத்தினால் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. இங்கு நிறுவனத்தின் நிபந்தனை களை மீறியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2020 ஜனவரி 30 திகதி வரை அவற்றை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் ஆணைக் குழுவினால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. அதே போல் பெஸ்டியன் மாவத்தை பஸ் நிலையத்தின் அங்கவீமற்றவர்களுக்காக தேவையான வசதிகளை வழங்குவதற்காக ரூபா 2 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 50 சதவீத பௌதீக முன்னேற்றம் ஏற்பட்டிருந்த தென முன்னேற்ற அறிக்கையின் படி அவதானிக்கப்பட்டது. | பெஸ்டியன் மாவத்தை பொலிஸ் காவலிடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள கழிவறை முறைமைக்கு பொது வசதிகள் வழங்குவதற் காக பராமரிப்புச் செய்து பயணிகளின் பாவணைக் காக பேணுவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றான மேதா என்டபிரய்ஸஸ் நிறுவனத்துடன் 2010.09.18 திகதி முதல் 2020.09.17 திகதி வரை 10 வருட காலத்திற்காக உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்தது. இந்தக் கழிவறை முறைமையின் திருத்த வேலைக்காக ரூபா 58 இலட்சம் செலவொன்று மேதா என்டபிரய்ஸஸ் நிறுவனத்தினால் மேற் கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டு தரப்பினரினதும் இணக்கத்தின் படி ஆரம்பத்தில் ரூபா 525,000 மாதாந்த வாடகை அடிப்படையில், அதன் நிறுவாகம் அந் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வருடமும் மாதாந்த வாடகை 10% இனால் அதிகரிக்கின்றது. அதன் படி, 2020 ஆண்டு அளவில் மாதாந்த வாடகை ரூபா 768,652.50 ஆகும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு செலுத்தப்படும் மாதாந்த கொடுப்பனவு உட்பட பல நிபந்தனைகளை புறக்கணித்திருந்தமை காரணத்தினால் அந்த நிறுவனத்தின் முகாமையாளரை தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிற்கு அழைத்து பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு பின்வரும் இணக்கப்பாடுகளுக்கு உடன்பட்டிருந்தது. | வெளித்தரப்பாருடன் பல்வேறு காரணங்களுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளும் போது சரியான முறையில் உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் உட்படுத்தப்பட வேண்டியதுடன் நிபந்தனைகள் உரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டும். |

- 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆரம்ப நிலுவை மாதாந்த வாடகையின் 03 மாத தவணைப் பணம் தவிர ஏனைய தவணைப் பணங்களையும் செலுத்துதல்.

- கழிவறை முறைமை யை பராமரிப்பதில் ஏற்பட்டுள் அனைத்து சிக்கல்களையும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிர்வாகப் பகுதிக்கு அறிவிக்கும் படி அதற்கான தீர்வு பெற்றுக் கொள்ளும் படியும்.

- கழிவறை முறைமை பயன்படுத்துவோரிடம் ரூபா 10 மாத்திரம் அறவீடு செய்யும் படியும் அந்த அறவீடு குறிப்பிட்ட இடத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டுமெனவும்.

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆண்டின் போது பயணிகள் கணிப்பீடு மேற்கொள்ளப்படுவதன் மூலம் புதிய பாதைகள் இனங்காணல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஆணைக்குழுவினால் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறாயினும் பாரிய பயணிகள் கோரிக்கையுடைய சந்தர்ப்பங்களில் ஒரு நாளைக்கு ரூபா 200, ரூபா 1,000 மற்றும் ரூபா 1,500 ஆகிய நாளாந்த கட்டண அறவீடு செய்வதன் மீது தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தற்போது தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினால் புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்காக செயற்படுத்தும் செய்முறை ஆகிய திறந்த கேள்வி அழைப்பின் போது கோள்விதாரர் களினால் தமது சேவையின் மூலம் உழைக்கக் கூடிய தொகையை விட பாரிய கேள்வித் தொகை ஒன்று மீது கேள்விகள் விண்ணப்பிக்கும் போக்கொன்று காணப்பட்டது. அதன் காரணமாக கேள்விதாரர் களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட | புதிய கணிப்பீட்டின் மூலம் இனங்காணப் பட்ட பாதைகளுக்காக நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்கும் போது உகந்த செய்முறை ஒன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

போதிலும் இந்தச் சேவைகள் தொடர்ச்சியாக பேணப்பட்டு வராததுடன் சிறிது காலம் சென்ற பின்னர் கேள்விமூலம் வழங்கப்பட்ட பஸ் சேவைகள் விளகுகின்றன. அதன்படி தற்போது புதிய செய்முறை ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதினால் அச் செய்முறை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் புதிய பாதை களுக்காக கேள்வி அழைப்பு மேற்கொள்வதற்கு முடியுமாகின்றது.

மேலும், பாரிய பயணிகள் கோரிக்கை காணப்படும் சந்தர்ப்பங்களில் மற்றும் நிரந்தர சேவை பஸ் வண்டிகள் ஓடுவதற்கு முன்வராத சந்தர்ப் பங்களில் ரூபா 200, ரூபா 1,000 மற்றும் ரூபா 1,500 என நாளாந்தக் கட்டணம் அறவீடு செய்வதன் மூலம் தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் மேற் கொள்ளப்பட்ட போதிலும் அந்த பயணிகள் விண்ணப்பங்கள் தொடர்ச்சியாக காணப்படவில்லை. அதே போல் பயணிகள் தேவைக்காக நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் உரிய பஸ் வண்டிகள் மேற் கூறிய விதமாக கட்டணங்கள் அறவீடு செய்து வேறு பாதை களுக்கு தற்காலிக அடிப்படையில் அனுப்பப் படுகின்றது. அதன்படி வார இறுதியில் போலவே நீண்ட வார இறுதிகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அதிகமாக பிரயாணிகள் கோரிக்கைகள்

காணப்படுவதுடன், அந்த வார இறுதிக் காலத்துக்கு மாத்திரம் செல்லுபடியாகும் விதமாக நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல் ஆக்கபூர்வமாக ஒன்றாக காணப்படவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கிளிநொச்சி பஸ் நிலையம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை 12 மாத ஒப்பந்த வேலை கால வரையறைக்குள் ரூபா 48,773,045 இற்கான கிரயமொன்றிற்கு நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரின் பதிவு செய்யப்பட்ட உடன்படிக்கைத் திகதியாகிய 2016 திசெம்பர் 29 திகதி காலாவதியாகியுள்ளது. அதே போல் அவ் ஒப்பந்தகாரரினால் நிர்மாண வேலை அலுவல்கள் புறக்கணிக்கப்பட்டிருந்த போதிலும் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.11.4 மற்றும் 5 பிரிவுகளின் படி கறைநிரல்படுத்திய ஒப்பந்தக்காரர்களின் அட்டவணையில் அந்த ஒப்பந்தக் காரரின் பெயரை உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் பூர்த்தி செய்யப்பட்ட வேலைக்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 16,469,363 தொகை கொடுப்பனவும் மேற் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக உரிய முறையில் குறிப்பிட்ட வேலையை பூர்த்தி செய்யப்படாமையால் பொது மக்களுக்கு பஸ் நிலையத்தை பயன்படுத்துவதற்கு இருந்த சந்தர்ப்பம் தவிர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தகாரருக்கு செலுத்தியிருந்த மேற்குறிப்பிட்ட தொகை சிக்கனமற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது. அதே போல் இந்த நிர்மாணவேலை வடமாகாண சபைக்கு நிர்மாணவேலையை தொடர்ந்து செய்யும் படி ஒப்படைப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 2020 ஜூன் 30 திகதி வரை வடமாகாண சபையினால் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. | உசாத்துணை நிறுவனத்தினால் வழங்கியிருந்த அறிக்கையின் படி தெரிவு செய்யப்பட்டிருந்த விலை கூறல் தாரர்கள் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்ததுடன் ICTAD பதிவு C3 ஆகும். அதனை 2017-06-06 வரை நீடிக்கப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>மேலும் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கையில் அதேவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>காலநீடிப்பு செய்யப்பட்ட தென ICTAD பதிவுப் புத்தகத்தில் குறிப்பிட்ட பக்கத்தின் பிரதி (இணைப்பு 04)<br><br>தர்மதாச கன்ஸ்டக்சன் என்ட் என்டபிரய்ஸஸ் நிறுவனத்தின் முகாமைத் துவப் பணிப்பாளர் நோய்வாய்ப்பட்டு குணமாக்க முடியாத நிலையில் இருக்கிறார் என அறிவித்து கிளிநொச்சி பஸ் தரிப்பிடத்தின் மீதி வேலைகள் மேற்கொள்ள முடியாது என எழுத்து மூலம் அறிவிக்கப் பட்டிருந்தது. (இணைப்பு 05) | ஒப்பந்த வேலைகள் வழங்கும் போது ICTAD நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த வழிகாட்டலின் படி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அந்த நிபந்தனைகளின் படி செயற்பட வேண்டும். |

உடன்படிக்கை முடிவுறுத்தும் போது அத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட முற்பண பிணைமுறி ஆகிய ரூபா 4,896,212.70 தொகை குறிப்பிட்ட வங்கியில் இருந்து அறவீடு செய்யப்பட்டது. அதன் படி செலுத்தப்பட்ட தொகை (16,469,363.48 – 4,896,212.70) ரூபா 11,573,150.78 ஆகும்.

ஒப்பந்தக்காரரின் உடன்படிக்கை முடிவுறுத்தும் போது மேற்கொள்ளப்பட்டிருந்த வேலையின் அளவு ரூபா 15,397,989.93 தொகை என அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் சான்றுபடுத்தப்பட்டிருந்தது. எனினும் மேற்குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலுத்தியிருந்த தொகை ரூபா 11,573,150.78 ஆகும். மேலும் செயலாற்றல் பிணைமுறிக்கு உரிய தொடர்பான ரூபா 2,438,700.00 தொகையும் தாமதக் கட்டணம் என ரூபா 2,438,625.25 தொகையும், தேபோஆகு இனால் அறவீடு செய்யப் பட்டிருந்தமையால் ரூபா 15,397,989.93 இற்கான வேலைகளுக்காக தேபோஆகு இனால் செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 9,134,450.78 ஆகும். (11,573,150.78 – 2,438,700.00) அதன் படி நிதி நட்டம் ஒன்று நிறுவனத்துக்கு ஏற்பட்டிருக்கவில்லை என கருணையுடன் குறிப்பிடுகின்றேன்.

ஒப்பந்த உடன்படிக்கை யின் படி குறிப்பிட்ட நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்படு வதனால் முற்பண பாதுகாப்பு முறி, செயலாற்றல் பாதுகாப்பு முறி மற்றும்

| | | | |
|---|---|---|---|
| | | தாமதக் கட்டணமும் அறவீடு செய்வதற்கு இயலுமாக இருந்தது. | |
| | | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி கிளிநொச்சி பஸ் நிலையம் வடமாகாண சபைக்கு ஒப்படைப்பதற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் குழு அறிக்கைகள், ஒப்படைக்கும் கடிதம் தேபோஆகு தரப்பினரால் கையொப்ப மிடப்பட்டு தொடர் நடவடிக்கைக்காக வட மாகாண சபைக்கு அனுப்பப்பட்டிருந்தது. | |
| (ஆ) | ஆணைக்குழு தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2017 திசெம்பர் 31 திகதி Process Automation System (PAS) செயற்திட்டத்தை நடாத்திச் செல்வதற்காக ரூபா 31,735,051 தொகை பெறுமதியான உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட செயற்திட்டம் 2018 நவம்பர் 15 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அவ்வாறாயினும் 2019 திசெம்பர் 31 திகதியளவிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், குறிப்பிட்ட செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் 2019 திசெம்பர் 31 திகதி அளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்காத போதிலும் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருக்கு ரூபா 23,056,820 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டம் மூன்று கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டதுடன், இந்த மூன்று கட்டங் களினதும் மென்பொருள் அபிவிருத்தி அலுவல்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மதிப்பீடு செய்யப்பட்டி ருந்த எண்ணிக்கையை விட மிகவும் சிக்கலான செய்முறை தொகை ஒன்று இந்த செயற்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட வேண்டி இருந்தமை, ICTAD நிறுவனத்தினால் Cloud வசதிகள் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட தாமதம், நிறுவனத்தில் காணப்பட்ட 3200 கோப்புகளை ஸ்கேன் பண்ணி மென்பொருளில் உட்படுத்துவதற்கு குறிப்பிட்ட காலம் ஒன்று எடுத்தல், ஒவ்வொரு செய்முறைகளுக்கும் தயாரித்திருந்த மென்பொருள் அபிவிருத்தி விவரக் குறிப்பு (Software Requirement Specification) இனை செய்முறைகளின் வசதிகளுக்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றம் செய்யும் படி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டமை, என்பவைக்கு ஆளாகி | குறிப்பிட்ட ஒப்பந்த வேலை உடன்படிக்கை மேற்கொள்ளும் போது உரிய முறையில் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் குறிப்பிட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டி இருந்ததுடன் நிபந்தனைகளின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இருந்தமை, இது வரை Manual செயற்பாடு மேற்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களை இந்த மென்பொருளுக் குள் உட்படுத்துவதற்கு கணிசமான காலம் கடந்திருத்தல் போலவே நேரடி செயற்பாடு (Live Operation) ஈடுபடுத்தும் போது பயன்படுத்துவதற்கு மிகவும் வசதியான (User Friendly) முறையில் மேற்கொள்வதற்கு தேவையான சுற்றாடலை ஏற்படுத்திக் கொள்ளல் போன்ற காரணங்களினால் இந்த செயற்திட்டம் மதிப்பிடப்பட்ட காலத்தை விட கூடிய காலத்தை பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டது. தற்போது இந்த மென்பொருள் (Live Operation) நேரடி செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் வருடம் முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிதிக் கூற்றுக்கள் 2020 ஜூன் 11 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | சுற்றறிக்கை ஏற்பாடு களுக்கு அமைவாக செயற்பட வேண்டி இருந்தது. |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பஸ் கட்டணத்திற்காக முற்கொடுப்பனவு காட் முறையொன்று அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதிலும் அதனை செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | 2019 செயல் நடவடிக்கை திட்டத்தின் படி முற் கொடுப்பனவு காட் முறை செயற்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டிருந்த போதிலும் இந்தச் செயற்திட்டம் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிற்கு மாத்திரம் தனியாக செயற்படுத்தக் கூடிய செயற்திட்டம் ஒன்று அல்ல. போக்குவரத்து அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, ஏனைய வாணிப வங்கிகள், இபோச, மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு போன்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து இந்த செயற் திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.<br><br>அதன் படி 2019 ஆண்டின் போது இந்த செயற்திட்டத்தை செயற்படுத்தும் முறை தொடர்பாக அனைத்து தரப்பு நிறுவனங்களுடனும் 12 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இது வரை இந்த செயற்திட்டம் விரைவாக செயற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ஆண்டின் போது செயற்படுத்தப்பட வேண்டிய எண்ணிக்கையை காட்ட வேண்டி இருந்ததுடன் காட்டப்பட்டிருந்த திட்டத்தின் அலுவல்கள் ஆண்டின் போது செயற்படுத்தப் பட வேண்டும். |
| (ஆ) | ஆணைக்குழுவினால் நிசி செரிய செயற்திட்டத்திற்காக புதிய 50 பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்துவதற்கு திட்டமடப்பட்டிருந்த போதிலும் 6 பஸ் சேவைகள் மாத்திரம் ஆரம்பிப்பதற்கு முடியுமாக இருந்தது. அதன் பௌதீக முன்னேற்றம் 12 சதவீதம் மாத்திரம் காட்டப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 2.6 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | தேசியப் போக்குவரத்து ஆணைக் குழுவினால் நிசி செரிய செயற்திட்டம் செயற்படுத்தப்படுவது இலங்கை போக்குவரத்துச் சபையுடன் மாத்திரம் ஆகும். அதன் படி 2018/2019 ஆண்டுகளுக்காக இபொச இனால் நிசி செரிய சேவைகள் 128 தொகை பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டத்திற்கு உட்படுத்துவதற்காக 2017 ஆண்டின் போது தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டி ருந்தது. அவ்வாறு அனுப்பப் பட்டிருந்த 128 சேவைகளும் | நிசி செரிய செயற் திட்டம் அரச கொள்கைகளை செயற்படுத்துவதற்காக திறைசேரியில் இருந்து நேரடி ஏற்பாடுகள் வழங்கப்படுவதினால் சரியான முறையில் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

உண்மையாகவே ஓடப்படுகின்றனவா என பரிசோதனை மேற்கொண்டு உடன்படிக்கை மேற்கொள்வதற்கு 2017.09.03 திகதி நடைபெற்ற ஆணைக் குழு கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டது. அதன் படி இந்த 128 சேவைகளில் 42 தொகை 2018 ஆம் ஆண்டில் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு ஓடப்படுகின்றனவா என உறுதிப்படுத்திய பின்னர் நிசி செரிய செயற்திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்தது.